ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2258/11 - 2021 දෙසැම්බර් මස 14 වැනි අඟහරුවාදා - 2021.12.14
*2258/11 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு, தெமோதர நீர் வழங்கல் செயற்திட்டத்தை நீடிக்கும் செயற்திட்டத்தின் கீழ் தோவ நீர் சேகரிப்புத் தாங்கியை மற்றும் நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினை எடுத்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை எடுத்துக் கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

தொடர்பு இல. DVP/*02/03*/BD/*319*.
*நீர் வழங்கல் அமைச்சு,*
*''லக்திய மெதுர'',*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2021, நவெம்பர் 29.*

1 A - G 35559 - 43 (2021/12)
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

பதுளை மாவட்டத்தில், எல்ல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 69D, தோவ கிராம அலுவலர் பிரிவில், தோவ கிராமத்தில் அமைந்துள்ள, உத்தரவு பெற்ற நில அளவையாளர் நிசான்த புலத்கே அவர்களினால் 2021.03.06 ஆந் திகதி வரையப்பட்ட 2021/07 ஆம் இலக்க திட்டப்படத்தின் துண்டு இல. 1 என சுட்டிக்காட்டப்பட்டுள்ள தோவ விஹாரய வத்த என்றழைக்கப்படுகின்ற காணியின் முழு விஸ்தீரணத்திலிருந்து சுமார் 0.01012 ஹெக்டயார் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப் பகுதியின் விபரங்கள் :

வடக்கு : தோவ பன்சலை காணி;
கிழக்கு : தோவ பன்சலை காணி;
தெற்கு : தோவ பன்சலை காணி;
மேற்கு : 2021/07 ஆம் இலக்க திட்டப்படத்தின் துண்டு இலக்கம் 2.

காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் : 01. தோவ ரஜமஹா விகாரை,
தோவ.

EOG 12 - 0129

---

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தில், 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு, உடுகம நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் வண்டற் படிவ உலர்த்தியை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினை எடுத்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதிகளின் அசையாச் சொத்துரிமையை எடுத்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.

**வாசுதேவ நாணாயக்கார,**
நீர் வழங்கல் அமைச்சர்.

தொடர்பு இல. DVP/02/02/GL/322.
நீர் வழங்கல் அமைச்சு,
''லக்திய மெதுர'',
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2021, திசெம்பர் 09.

**அட்டவணை**

காலி மாவட்டத்தில், நாகொட பிரதேச செயலகப் பிரிவில், இல. 219 A, ஹோமதொல கிராம அலுவலர் பிரிவில், உடுகம கிராமத்தில் அமைந்துள்ள, ஹோமதொல வத்த என்றழைக்கப்படுகின்ற காணியின் விஸ்தீரணத்திலிருந்து சுமார் 20 பேர்ச்சுகள் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதியின் விபரங்கள் :

வடக்கு : ஹோமதொல தோட்டத்தின் உட்புற பாதை;
கிழக்கு : நீர் வழங்கல் சபையின் அலுவலகம் மற்றும் வளவு;
தெற்கு : ஹோமதொல தேயிலைத் தொழிற்சாலையின் வீதி;
மேற்கு : ஹோமதொல தோட்டம்.

காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் : வடவல தோட்ட நிறுவனம்,
இல. 754/5, கண்டி வீதி,
வெதமுல்ல,
களனி.

EOG 12 - 0130

## *1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தில், 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு, உடுகம நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் அமுக்க நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதிகளை எடுத்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதிகளின் அசையாச் சொத்துரிமையை எடுத்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

தொடர்பு இல. DVP/*02*/*02*/GL/*323*.
*நீர் வழங்கல் அமைச்சு,*
*''லக்திய மெதுர'',*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2021, திசெம்பர் 09.*

### *அட்டவணை*

*காலி மாவட்டத்தில், நாகொட பிரதேச செயலகப் பிரிவில், இல. 218 D, உக்ஔவிட கிராம அலுவலர் பிரிவில், உடுகம கிராமத்தில் அமைந்துள்ள, ஹோமதொல வத்த, T - 06 என்றழைக்கப்படுகின்ற காணியின் விஸ்தீரணத்திலிருந்து சுமார் 10 பேர்ச்சுகள் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதியின் விபரங்கள் :*

| | | |
|---|---|---|
| *வடக்கு* | : | *ஹோமதொல வத்த காணி;* |
| *கிழக்கு* | : | *காலி - உடுகம வீதி;* |
| *தெற்கு* | : | *ஹோமதொல வத்த காணி;* |
| *மேற்கு* | : | *பிடிகல - ஹோமதொல வத்த காணி.* |

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :* *வடவல தோட்ட நிறுவனம்,*
*இல. 754/5, கண்டி வீதி,*
*வெதமுல்ல,*
*களனி.*

EOG *12 - 0131*